மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை :- **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீடாமங்கலம்

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2023 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30 ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் ஆவணித்திங்கள் 13 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 477/2022 -ல்**

**இடைநிலை மனு எண். 463/2021 -ல்**

**அசல் வழக்கு எண். 119/2021**

1. அஞ்சப்பன்

2.மலர்

3.செல்வநாயகம்

4.லதா ...மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

// **எதிர்**//

நாகேஸ்வரன் ...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 14.07.2023 ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. உதயகுமார் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. விஜயன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது இடைநிலை மனு எண்.463/2021 மனுவில் மனுதாரருக்கு எதிராக 18.08.2022 தேதியில் ஏற்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 9 விதி 7-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி. 2 முதல் 4 மனுதாரர்களுக்காகவும் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இடைநிலை மனு எண்.463/2021-ல் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்ய 18.08.2022 தேதியில் வாய்தா போடப்பட்டு எதிருரை தாக்கல் செய்யாததாலும், அழைக்கப்பட்டு வருகையில்லாததால் அவர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு ஏற்பட்டுள்ளது. மனுதாரருக்கு விஷக்காய்ச்சல் ஏற்பட்டு சிகிச்சை எடுத்துக்கொண்டு இருந்ததால் மனுதாரரால் வழக்கறிஞரை சந்தித்து எதிர்வழக்குரை தயாரித்து தாக்கல் செய்ய இலாமல் போய்விட்டது. வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ இருக்கவில்லை. இப்பால் வழக்கறிஞரை சந்தித்து மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, தாக்கல் செய்துள்ள எதிருரையை ஏற்றுக்கொண்டு மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்குஎதிராக ஏற்பட்டுள்ள ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-**

மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது நிலைநிற்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்படுகின்ற சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்கவேண்டும். அசல் வழக்கை இழுத்தடிக்கும் நோக்கத்திலும், எதிர்மனுதாரர்/வாதிக்கு கஷ்ட நஷ்டத்தை ஏற்படுத்தியும், யாதொரு நீதியின் பலனும் கிடைத்துவிடக்கூடாது என்ற நோக்கத்தில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று

எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** மனுவினை பரிசீலிக்கும்போது அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக வாய்தாபோடப்பட்டிருந்தபோது, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் கடந்த 18.08.2022 ம் தேதியன்று தோன்றாத்தரப்பினராக முடிவு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மேற்படி காரணத்திற்கான ஆவணங்கள் எதுவும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

இருதரப்பு வாதங்களும் கருத்திற்கொள்ளப்பட்டது. இந்த அசல் வழக்கினை பொறுத்தவரை மனுதாரருக்கு இது முதன்முறை தவறுகை என்பதாலும், மனுவுடன் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதை கருத்திற்கொண்டும், மனுதாரருக்கு அவரது தரப்பு கட்சியை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்பதாலும், இம்மனுவை நீதியின் நலன் கருதி உரிய நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் என முடிவு செய்கிறது.

**முடிவில்,** மனுதாரர்கள்/பிரதிவாதிகள், எதிர்மனுதாரர்/வாதிக்கு செலவுத் தொகையாக ரூ. 1000/-ஐ எதிர்வரும் 12.09.2023 ம் தேதிக்குள் செலுத்தி வைக்கவேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்ற

நிபந்தனையுடன் மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. இம்மனுவினை மீண்டும் அழைக்க 13.09.2023

இவ்வுத்தரவு எனனால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (30.08.2023) அவையறியப் பகரப்பட்டது.

(S/d-.A.Seethalakshmi),
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(மு.கூ.பொ)

<u>**குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**</u>

**இருதரப்பிலும்** : இல்லை

(S/d-.A.Seethalakshmi),
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(மு.கூ.பொ)